மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 107, திரு. ஆர். முருகையா பாண்டியன்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

107--

அம்பாசமுத்திரம் ராமநதியின் குறுக்கே பாலம் கட்டுதல்

***20461-திரு. ஆர். முருகையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் ராமநதியின் குறுக்கே வடக்கு பாப்பாங்குளம் கிராமத்தையும் ஆழ்வார்குறிச்சி பகுதியையும் இணைக்க ஒரு பாலம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராமநதியிலே கட்டப்படவேண்டிய பாலம் மிகவும் முக்கியமான பாலம். ஆழ்வார்குறிச்சியையும் பாப்பாங் குளத்தையும் இணைக்கக்கூடிய பாலம் இது. இந்த ஆற்றின் வழியாக பல லட்சம் பேர்கள் செல்கின்றார்கள். அந்த ஆற்றின் வழியாகத்தான் நடந்து சென்றுக்கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக, இந்தப் பாலத்தைப் போடவேண்டுமென்று அங்கேயுள்ளவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய திட்டத்தின்படி தொகுதியிலே கட்டவேண்டுமென்ற அடிப்படையிலே, அந்தப் பாலத்தை இந்த ஆண்டு தேர்வு செய்திருந்திருந்தார்கள். டெண்டர் விடப்பட்டதாக நான் அறிகிறேன். ஆனால் அதற்கு 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே இந்த ஆண்டு இந்த வேலை தொடங்கிவிடுவார்களா என்று கேட்கின்ற நேரத்திலே, 6 இலட்சம் ரூபாயிலே மதிப்பீடு செய்தோம். ஆனால்

1993 டிசம்பர் 31]

இப்போது இந்த புயல் அடித்ததன் காரணமாக இந்த ஆற்றினுடைய அகலம் கூடிவிட்டது. எனவே பணம் காணாது. எனவே கூட 3 இலட்சம் ரூபாய் கிடைத்தால் இந்தப் பாலத்தைக் கட்டலாம் என்று அங்கேயுள்ள நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் என்னிடத்திலே சொன்னார்கள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தை கட்டித்தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, தொகுதிக்கு ஒரு பாலம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையிலே 5 இலட்சம் ரூபாய் அளவிலே ஒரு தொகுதிக்கு எடுக்கலாம் என்று சொல்லி, அனைத்துத் தொகுதிகளுக்கும் மதிப்பீடு தயார் செய்து, அதற்கு நிதி ஆதாரங்களையும் நிதித் துறையினிடமிருந்து நாம் பெற்றோம். ஆகவே 5 இலட்சத்திற்கு அதிகமாகின்ற பணிகளுக்கான தொகைகளை அரசு கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கின்ற காரணத்தால்தான் அதிக மதிப்பீடு இருக்கும் பாலங்கள் எடுக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததுபோல, 10 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட மதிப்பீட்டைவிட இது அதிகமாக இருக்கின்ற காரணத்தாலேதான், இதிலே அதிகாரிகளுக்குச் சிரமம் இருக்கிறது. ஏனென்றால் நாம் ஒரு இலக்கை நிர்ணயித்து, அதன்படி செயல்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கின்றபோது, அவர்கள் அந்த வரம்பை மீறிச் செயல்பட முடியாது. ஆகவே அந்த அடிப்படையிலேதான் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடத்திலே தெரிவித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இது சம்பந்தமாக அதிகாரிகளோடு கலந்து பேசி, வேறு சேவிங்ஸ்--பணம் இருக்குமானால், அதிலிருந்து இதற்குத் தொகையை ஒதுக்கி, இது சம்பந்தமாக நடவடிக்கைகளை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு எந்த வகையிலாவது, எந்த நிதியிலிருந்தாவது அந்தப் பணத்தை ஒதுக்கீடு செய்து, அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். ஜே.வி.வி.டி.-ல் இருந்து இதற்கு இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்து உதவுங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நான் கேட்டேன். அவர்களும் ஒன்றரை இலட்சம் ரூபாய் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். பணத்தையும் கொடுத்திருப்பதாக அறிகிறேன். இருந்தாலும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும் இந்தப் பாலத்தின்மீது தனி அக்கறை எடுத்து, 2, 3 இலட்சம் ரூபாயை எந்த நிதியிலிருந்தாவது கொடுத்து, இந்த ஆண்டே இந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கே.பி. ராஜு, கேள்வி நேரத்தின்போது அமைச்சர்களை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது. நீங்களும் துணைக் கேள்வி போடுவதற்குக் கவனமாக இருக்கவேண்டும். அமைச்சர்களும் தங்கள் பணியை ஆற்ற விடவேண்டும்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இந்தப் பாலம் குறித்து ஒரு உறுதிமொழி தருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். நிச்சயமாகத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நெடுஞ்சாலைத் துறையினுடைய பாலமல்ல. இது ஊராட்சி ஒன்றியத்தினுடைய பாலம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கைக்குத்தான் நான் பதில் தெரிவித்திருக்கிறேன். 5 இலட்சம் ரூபாய் போக மீதி நிதியை எப்படிப் பெறுவது என்பதுதான் இதில் பிரச்சினை. மாவட்ட ஆட்சித் தலைவர் ஒன்றியக் கணக்கிலே இருந்து ஒன்றரை இலட்சம் தருவதாகச் சொன்னார்கள். அது போக 3 இலட்சம் ரூபாய் வேண்டும். நெடுஞ்சாலைத் துறை ஹெட்டிலே அதற்கு ஒதுக்க முடியாது. அந்த நிதியை இதற்குச் செலவழிக்க முடியாது. ஆகவே பார்ட்-2 ஸ்கீமில் இதைச் சேர்க்க முடியுமா அல்லது ஏற்கெனவே பாலங்களுக்கு என்று தமிழ்நாடு முழுவதும் சேர்த்து ஒதுக்கியதில் ஏதாவது சேவிங்ஸ்--மிச்சம் இருந்தால் அதை ஒதுக்கலாமா என்று ஆராயலாம் என்று தெரிவித்தேன். எனக்கும் இதில் அக்கறை இருக்கிறது. எனவே உரிய முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 108, டாக்டர் க. கோபால்; மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.